**Tiaano®** Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

### GOAL 2014-2015

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 6.25% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS


- **Customers…**
  - Up to Feb. 15 : 831Nos.
  - Up to Jan. 15 : 825 Nos.
- **Performance Feb. 15 …**
  - Turnover growth : 2.69%
  - Employment growth : 0.56%
  - 100% Attendance : 11.29%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

### OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)




### சந்தோஷம்

ஒரு காட்டில் வச் என்ற காகம் இருந்தது. அதன் அலகு சற்றே மடங்கிய நிலையில் அவலட்சணமாக இருக்கும். இதனால் அந்த காகத்திற்கு எப்போதும் தன்னைப் பற்றி ஒரு தாழ்வு மனப்பான்மை இருந்தது. ஏதாவது ஒரு காக்கை கூட்டத்தைக் கடந்து போகும் போது தன்னைப் பற்றியும், தனது மடங்கிய அலகைப் பற்றியும் மற்ற காகங்கள் கேலி பேசுமோ என்ற சிந்தனையுடன் பதற்றத்துடன் தனது அலகை மறைத்தப்படி தான் செல்லும்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு நாள் அவலட்சணமான உடலமைப்பு கொண்ட சஞ் என்ற இன்னொரு காகத்தை அது சந்தித்தது. சஞ் காகத்திற்கு உடல் மட்டும் அல்ல அதன் அலகும் கூட ஒரு மாதிரி மடங்கிய நிலையில் தான் இருந்தது. அந்த காகத்துடன் ஒப்பிடுகையில், வச் உடல் ஊனம் ஒரு பெரிய குறையாக இல்லை. அதே சமயம் சஞ் காகம் மிகவும் சந்தோஷமாக வாழ்வதையும் மற்ற காகங்களுடன் எந்த வித தாழ்வு மனப்பான்மையும் இன்றி வாழ்வதையும் கண்டு வச் காகம் ஆச்சரியப்பட்டுப்போனது.

மெல்ல அதன் அருகில் சென்ற வச், உடல் ஊனமுற்ற காகத்தைப் பார்த்து மெல்லிய குரலில், “நீ எப்படி இருக்கிறாய்?” என்றது. உடனே உடல் ஊனமுற்ற சஞ் பலமான குரலில், “நீ சொல்வது என் காதுகளில் விழவில்லை. எனக்கு காது கொஞ்சம் மந்தம். அதனால் இன்னும் சத்தமாக பேசு” என்றது.

அதைக் கேட்ட வச் காகம், “நான் உன்னிடம் என்ன கேட்க நினைத்தேனோ, அதையே நீ சொல்லி விட்டாய். நான் வருகிறேன் நண்பனே” என்றவாறு அங்கிருந்து பறந்துவிட்டது. நாட்கள் பல கடந்தன. இந்த நாட்களில் வச் தன்னம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்திருந்தது. மடங்கிய தனது அலகினால் தான், தாழ்வு மனப்பான்மை கொள்ளத்தேவையில்லை என்பதை உணர்ந்தது.

அதன்பிறகு எந்த காகத்தைக் கண்டாலும் அது பயந்து ஒளிவதில்லை. தவிர, தன்னைப்பற்றி யார் என்ன கேலி செய்தாலும் அதை பெரிதாகவும் எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் வச் காகத்திற்கு நாளடைவில் அதன் கூட்டத்தில் நல்ல மரியாதையும், மதிப்பும் கிடைத்தது. அடுத்த சில வாரங்களில் அது தனது கூட்டத்திலிருந்த காக்கைகளுக்கு தலைவனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது.

ஒரு நாள் காட்டில் இருந்த எல்லா காக்கைகளின் கூட்டத்திற்குமான மூத்த தலைவர் காகத்தைச் சந்திக்கும் வாய்ப்பு வச்சிற்கு ஏற்பட்டது. அப்போது மூத்த தலைவர் காகம், வச், “நீ கோழையாக இருந்ததாக கேள்விபட்டேன். இப்போது எப்படி நீ புகழ்பெற்றவனாகி விட்டாய்?” என்றது.

“எனக்கு நானே சில நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக்கொண்டேன். யார் எனது ஊனத்தைப் பற்றிக் கேலி செய்தாலும் அதை நான் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. நம்மைப்பற்றி மற்றவர்களின் விமர்சனங்கள் நம்மைப் புண்படுத்துவதாக ஏன் எடுத்துக் கொள்ளவேண்டும்.

## FUNCTIONAL WISHES



TAMIL NEW YEAR
14th APRIL

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : Lr. M.K. Govindan
: Lr. V. Benedict Vincent
Tech. Consultant: Dr.G.S. Viswanath
Central Excise : Mr. R. Raghavan
Health Care : M/s. Bethesda Hospital
Tel: 22294565
: M/s. Jeya Clinic
Tel: 098408 73107

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. Samuel. S. Sekhar**<br>Marketing | **01st Apr.** |
| **Mr. G. Manivannan**<br>Coating | **01st Apr.** |
| **Mr. G. S. Mohana Kumar**<br>Production | **01st Apr.** |
| **Mr. C. Abilash**<br>Marketing | **03rd Apr.** |
| **Mr. T. Raveendran**<br>Marketing | **04th Apr.** |
| **Miss. T. Regi**<br>Facilitation | **04th Apr.** |
| **Mr. G. Janarthanan**<br>Fibtec | **05th Apr.** |
| **Mr. M. Pullan**<br>Production | **07th Apr.** |
| **Mr. A. Neduchizhian**<br>Production | **07th Apr.** |
| **Mr. T. Ramesh**<br>Marketing | **08th Apr.** |
| **Mr. K. Murugan**<br>Production | **08th Apr.** |
| **Mr. T. Stephen Prabakar**<br>Finance | **09th Apr.** |
| **Mr. S. Kannan**<br>Production | **10th Apr.** |
| **Mr. C. Subash**<br>Production | **13th Apr.** |
| **Mr. A. Pasupathi**<br>Fibtec | **15th Apr.** |
| **Mr. N. Muruganantham**<br>Fibtec | **20th Apr.** |
| **Mrs. A. Nirmala**<br>Finance | **22nd APril** |
| **Mr. N. Shanmugam**<br>Project | **30th Apr.** |

**Best Wishes from Tiaano Employees**

அதனால் என்னிடமிருந்த தாழ்வு மனப்பான்மையை ஒதுக்கி வைத்துவிட்டு, எங்கள் கூட்டத்தினரோடு கூட்டமாக நானும் கலகலப்பாகப் பேசினேன். எனது தன்னம்பிக்கை இன்னும் அதிகரித்தது. என்னுடைய பொறுமையை கண்ட என் கூட்டத்தினர் எனக்கு இறைவன் கொடுத்த அறிவை கண்டனர். உடலில் ஊனம் இருந்தாலும், இத்தனை அறிவை கொடுத்திருக்கிறானே என நினைத்த எங்கள் கூட்டத்தினர் என்னைத் தலைவராக தேர்ந்தெடுத்தனர், "என்றது வச்" உன்னை போல் தான் எல்லோரும் இருக்க வேண்டும். முதுகில் தட்டிக்கொடுத்து பாராட்டியது மூத்த காகம்.

ஆம் நாமும் நம்மில் உள்ள குறைகளை பெரிது படுத்தாமல் எல்லாவற்றிலும் எனக்கு அப்படியிருக்கிறதே, இப்படியிருக்கிறதே என்று கவலைக்கொள்ளாமல் எப்பொழுதும் எல்லா நேரங்களிலும் இறைவனுக்குள் சந்தோஷமாயிருங்கள்.

Compiled by Ms. P.E. Nancy
Director-Admin

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

மனிதர்களைப் பற்றி கடவுளுக்கே புரியாத விஷயங்கள் இரண்டு. இது கடவுள் உடனான ஒரு கற்பனைப் பேட்டியில் வெளிவந்தது.

குழந்தைகளாக இருக்கும்போது பெரியவர்களாக வேண்டும் என்று அவசரப்படுகிறார்கள். பெரியவர்களான பிறகு, குழந்தைகளாகவே இருந்திருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

உடல் நலன் பற்றிக் கவலையே இல்லாமல், பணம் சம்பாதிக்க அலைகிறார்கள். பணம் சம்பாதித்த பிறகு அதனை உடல் நலனுக்காக செலவிடுகிறார்கள்.

ஆரோக்கியமே அடித்தளம். மற்றவை எல்லாம் தொடர்ந்திடும்.

–கான்ஃபிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### முடியாதது எதுவுமே இல்லை

- கொழுந்து விட்டெரியும் நெருப்பாக இருங்கள். வாழ்வில் எதிர்ப்படும் ஒவ்வொரு நிகழ்வும் நமது முன்னேற்றத்திற்கு உதவுவதற்காகவே என்று எண்ணுங்கள்.
- உங்கள் செயல்கள் மகிழ்ச்சி அளிப்பதாய் இருக்கட்டும். ஆனால், உங்களுடைய சொந்த மகிழ்ச்சிக்காக எதையும் செய்யாதீர்கள்.
- பரபரப்பு, கலகம், பதட்டம் இவற்றைத் தவிர்த்து விடுங்கள். எந்தச் சூழ்நிலையிலும் பூரண அமைதியைக் கடைபிடியுங்கள்.
- பிறரிடம் காணப்படும் குறைகளை மாற்றும் ஆற்றல் உங்களிடம் இருந்தால் அன்றி, யாரையும் குறை சொல்ல முயலாதீர்கள்.
- உங்கள் முன் வைத்திருக்கும் லட்சியத்தை ஒரு போதும் மறந்து விடாதீர்கள். அதை நோக்கி முன்னேறும் விதத்தில் செயல்படுங்கள்.
- சொற்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். மிக அவசியம் இருந்தால் ஒழிய பேச வேண்டாம்.
- உள்ளத்து உறுதியும், பெருமித உணர்வும் கொண்டு உங்கள் பாதையில் நடைபோடுங்கள்.
- எப்போதும் நல்லதையே எண்ணி செயல்படுகின்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- நேர்மை, பொறுமை, வலிமை இவற்றைப் பயன்படுத்தி அச்சத்தின் நிழல் கூட இல்லாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

## தெரிந்து கொள்வோம்

### EDWIN'S CONSTANT

i. Take any four consecutive numbers: n, n+1, n+2, n+3
ii. The sum of n, n+3 would be equal to the sum of n+2, n+1
iii. Likewise difference between n+2 and n would be equal to the difference between n+3 and n+1
iv. Product of the sum of 'n' and 'n+3' and difference of 'n+2' and 'n' will be equal to the sum of all four numbers

**Proof:**

Consider 11, 12, 13, 14

**n = 1, n+1 = 12, n+2 = 13,n+3 = 14**

i. 11+14 = 25 = 12+13

**(n)+(n+3) = (n+1)+(n+2)**

ii. 13-11 = 2 = 14-12

**(n+2)-(n) = (n+3)-(n+1)**

iii. (11+14) * (13-11)

25*2 = 50 = 11+12+13+14

**[n+(n+3)]*[n+2-n] = n+(n+1)+(n+2)+(n+3)**

Compiled By : Selvan. S.V. Edwin Jayakumar
S/o Mr. C. Sounder Suresh

### துளிகள்

- ஆப்பிள், திராட்சை போன்ற பழங்கள் மிகவும் புளிப்பாக இருந்தால் அதை நறுக்கி உப்பு, மிளகாய்ப் பொடி, வெந்தயப் பொடி, பெருங்காயப் பொடி கலந்து ஊறுகாயாக மாற்றிக் கொள்ளவும்.
- டீ தயாரிக்கும் போது பத்துப் பதினைந்து துளசி இலையை சேர்த்துக் கொதிக்க வைத்தால் ஜலதோஷம் மூக்கடைப்பு வராமல் பார்த்துக் கொள்ளும். ருசியும் தூக்கும்.
- காளான் ரத்தத்தைச் சுத்தப்படுத்தும் தன்மை கொண்டது. அதிக ரத்த அழுத்தத்தையும், ரத்த நாளங்களின் உட்பரப்பில் உண்டாகும் கொழுப்பு அடைப்பையும் தடுக்கிறது. இதயத்தை பாதுகாப்பதில் காளான் பெரும் பங்கு வகிக்கிறது.
- வெங்காய சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காய சாற்றை பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவினால் பல்வலி, ஈறுவலி குறையும்.

Compiled By : Mr. R. Manikandan
Purchase

- துணிவுடன் செயலாற்றுங்கள். நம்பிக்கையைக் கை கொள்ளுங்கள். முடியாதது என்று எண்ணாத வரை முடியாதது எதுவுமில்லை.

Compiled by Mrs. M. Sudha
Marketing

### உலகின் தலைசிறந்த சிந்தனையாளர்கள் பட்டியலில் திருவள்ளுவர்

சிங்கப்பூரில் உள்ள பிரபல MDIS கல்வி நிலைய வளாகத்தில் திருவள்ளுவர் சிலை. சிங்கையில் உள்ள பிரபலமான மேலாண்மை பட்டப்படிப்பு வழங்கும் MDIS என்னும் (Management Development Institute of Singapore) கல்வி வளாகத்தின் நுழைவாயிலில் உலகின் தலைசிறந்த பத்து சிந்தனையாளர்களின் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளது. இதில் தமிழர்களின் பெருமையான திருவள்ளுவருக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த சிலைகள் நிறுவப்பட்டு பல ஆண்டுகள் ஆனாலும் தமிழ்நாட்டில் பலருக்கும் இது குறித்த செய்தி தெரியாது. பல்லாயிரம் பன்னாட்டு மாணவர்கள் பயிலும் இந்த கல்வி நிலையத்தில் இத்தகைய சிந்தனையாளர்களின் சிலைகளை வைத்திருப்பது, மாணவர்களுக்கு நன்னெறிகளை கற்றுக் கொடுப்பதோடு, நன.மை தீமைகளை மாணவர்கள் பகுத்துணர்ந்து அறிய இத்தகைய முயற்சியை மேற்கொண்டுள்ளது MDIS நிர்வாகம்.

இதில் உள்ள உலகின் தலை சிறந்த சிந்தனையாளர்களின் பட்டியலில் இதோ…லூயிஸ் பாஸ்டர், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், இப் கால்டன், பென் ஜான்சன், அரிஸ்டாட்டில், திருவள்ளுவர், பிளாடோ, கன்புயுசியஸ், சாக்ரடிஸ் மற்றும் மரியா மாண்டேசரி.

இந்த சிலைகளை இந்த கல்வி நிலையத்தில் நிறுவுவதற்கு காரணமாக இருந்தவர் MDIS நிறுவனத்தின் பொதுச் செயலாளர் முனைவர் தேவேந்திரன் ஆவார். தமிழரான இவரது தாய் தந்தையின் பூர்வீகம் இலங்கை ஆகும். இக்கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களை மனதளவில் ஊக்கப்படுத்தவும், அவர்கள் வாழ்க்கைக்கு தேவையான ஒழுக்கங்களை பெறுவதற்கும் இந்த தலைசிறந்த மனிதர்களின் உருவச் சிலைகள் உதவும் என்பதற்காக தேவேந்திரன் இந்த சிலைகளை கல்வி நிலையத்தின் வாசலில் நிறுவி உள்ளார். பன்னாட்டு மாணவர்கள் இப்போது யார் திருவள்ளுவர் என்பது பற்றியும் உலகப் பொது முறையாம் திருக்குறள் பற்றியும் அறிந்து வருவது தமிழர்களுக்கு பெருமை தானே.

இது போல் உலகில் பல்வேறு நாடுகளிலும் திருக்குறளின் பெருமையை பற்றியும் திருவள்ளுவரை பற்றியும் அறியுமாறு தமிழர்கள் தங்களால் முடிந்த செயல்களை செய்ய வேண்டும்…

Collected from Internet

### நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி XXXIX)

**அஞ்சறைப் பெட்டி**

இரண்டாவது, எல்லாக் கருவிகளும் பயன்படுத்தப்பட்ட பிறகு, அதனதன் இடத்தில்தான் வைக்கப்படவேண்டும். இதில் குழப்பம் நேர்வதற்குச் சாத்தியமே இல்லை.

கடைசியாக, ஒரு வேளை ஏதேனும் ஒரு கருவி / ஸ்பேனர்

## கவிதைகள்

### மரம்

களைப்பாற நிழல்...
நிழல் கொடுக்க நீ...
விளையாட ஊஞ்சல்...
எங்களை சுமக்கும் நீ...
பசி ஆற நாங்கள்...
பழம் கொடுக்க நீ...
கை தட்டி ரசிக்க நாங்கள்...
காற்றில் நடனம் ஆட நீ...
உன் பிள்ளைகளாய் நாங்கள்...
எங்கள் தாயாய் நீ...

### பாசம்

பாசத்திற்கு உயிரை
கொடுப்பது சுலபம்
ஆனால்...
உயிரை கொடுக்கும்
அளவிற்கு பாசம் கிடைப்பது
தான் கஷ்டம்.

Compiled by Miss. T. Regi
Facilitation

### வலி

விதை இல்லா மரம் ஏது
வலி இல்லா வாழ்க்கை ஏது

வலி என்ற ஒன்றே
உயிரின் உணர்விடம்,
உளியின் வலியை பொறுக்கும்
கல்லே சிலையாகிறது
வாழ்க்கையின் வலியை பொறுக்கும்
மனிதனே மேதையாகிறான்............

Compiled by Mrs. C. Bavani
Administration

## சிந்தனைக்கு

தான் விரும்புகின்ற வேலையாக இருந்தால் எந்த முட்டாளும் அதைச் செய்து முடிப்பான். எந்த வேலையாக இருந்தாலும் அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

விடுபட்டிருந்தால், அதுவும் பளிச்சென்று தெரிந்துபோய்விடும்.

'பெக் போர்ட்' போன்ற ஓர் உத்தி, நமது சமையலறைகளிலும் உண்டு.இதுவும் சுவரில்தான் தொங்கிக்கொண்டிருக்கும். பெரிய, சிறிய, மிகச்சிறிய தட்டுகள், கரண்டி, ஸ்பூன், டம்ளர் வகையறாக்களையெல்லாம் இதில் சரியாகப் பொருத்தி வைக்கலாம். இதுபோன்ற உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம், பொருள்களைச் சரியான இடத்தில் வைக்க வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சியை நமது தொழிலாளர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் சுலபமாக ஏற்படுத்தமுடியும். அடுத்து, மீண்டும் ஒரு ரிப்பன் விளையாட்டு!

### காட்சியும் கட்டுப்பாடும்

அஞ்சறைப் பெட்டியில் ஒரு சில பொருள்களைப் போட்டுவைப்பது நல்ல சவுகரியம்தான். ஆனால், எல்லாப் பொருள்களையுமா அதற்குள் சேமித்து வைக்கமுடியும்?

உதாரணமாக – அரிசி, பருப்பு என்று பெரிய அளவில் எடுத்துப் பயன்படுத்துகிற பொருள்களையெல்லாம், அஞ்சறைப் பெட்டியினுள் வைக்க முடியாது. அவற்றை வேறு இடங்களில்தான் சேமித்தாக வேண்டும்.

வேறு இடங்கள் என்றால் சமையலறைக்கு உள்ளேயும் இருக்கலாம், வெளியேயும் இருக்கலாம். நிறைய குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட வீடுகளில், அதிக அளவில் மளிகைச் சாமான்களை வாங்குவார்கள்.அவற்றை 'ஸ்டோர் ரூம்' என்ற தனி அறையில் வைத்திருப்பார்கள்.

ஆனால், எல்லா வீடுகளிலும் இந்த வசதி இருக்கும் என்று சொல்லமுடியாது. ஆகவே எல்லாவற்றையும் சமையலறைக்குள்தான் வெவ்வேறு இடங்களில் சேமித்துவைக்க வேண்டியிருக்கிறது.

இந்த விவரம், அந்த வீட்டின் குடும்பத் தலைவிக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும். சமையலில் தொடர்ந்து ஈடுபடுகிற வேறு சில உறுப்பினர்களுக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு உண்டு. மற்றவர்களுக்கு?

உதாரணமாக, ஏதோ ஒரு தூரத்து உறவினரின் திருமணத்திற்குக் குடும்பமே கிளம்பிப் போய்விடுகிறது. அரையாண்டுப் பரீட்சையை முன்னிட்டு, ஒரே ஒரு ப்ளஸ் டூ பையன் மட்டும் வீட்டிலேயே சிக்கிக் கொள்கிறான் என்று வைத்துக்கொள்வோம்.

தொடரும்...

## CHEMICAL MIXTURE

